12 DEC 2023
சென்னை 600 006

101831

சுருக்கம்

பள்ளிக் கல்வி - அரசுத் தேர்வுகள் இயக்ககம் - பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு/ துணைத் தேர்வு / தனித் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு விடைத்தாள்களின் ஒளி நகல் (scan copy) வழங்குதல், மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு மேற்கொள்ளுதல் பணிகளுக்கான அனுமதி மற்றும் கட்டணம் நிர்ணயம் செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை

அரசாணை (நிலை) எண்.211

நாள் 18.11.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம், கார்த்திகை 02,

படிக்கப்பட்டவை :

1. அரசாணை (நிலை) எண்.1925, கல்வி, அறிவியல் (ம) தொழில்நுட்பவியல்(வி1)த் துறை, நாள் 30.08.1982.
2. அரசாணை (நிலை) எண்.64, பள்ளிக் கல்வித்(வி1) துறை, நாள் 26.05.2003.
3. அரசாணை (நிலை) எண்.8, பள்ளிக் கல்வித்(வி1) துறை, நாள் 17.01.2001.
4. அரசாணை (நிலை) எண்.111, பள்ளிக் கல்வித்(வி1) துறை, நாள் 18.05.2009.
5. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண். 013522/பி1/2023, நாள் 23.08.2023.

------------

ஆணை:

மேலே ஒன்றாவதாக மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளின்படி, ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் பள்ளி மாணவ / மாணவியர்களுள், தங்கள் விடைத்தாட்களில் மறுகூட்டல் கோரும் தேர்வர்களின் விடைத்தாட்களை மறுகூட்டல் செய்து முடிவுகள் வழங்கப்பட்டு வருகிறது.

2. மேலே மூன்றாவது மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளின்படி., மேல்நிலை பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு அவரவர்களின் கோரிக்கையின் அடிப்படையில், அனைத்துப் பாடங்களின், விடைத்தாள்களின் நகல்களையும் வழங்கி,

அச்சுப் பகர்ப்பு நகல் மற்றும் மறுமதிப்பீடு செய்து வழங்க வழிமுறை ஏற்படுத்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு / துணைத் தேர்வு / தனித்தேர்வு எழுதும் மாணவர்கள் விடைத்தாட்களில் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்து வெளியிடப்படும் முடிவுகளில், மதிப்பெண்கள் மாற்றம் இல்லாத மற்றும் மறுகூட்டல் மதிப்பெண் முடிவுகளில் திருப்திகரமாக இல்லாததால், நீதிமன்றங்களை அணுகியும், தகவல் அறியும் உரிமை சட்டம் வாயிலாகவும், முதலமைச்சரின் தனிப்பிரிவு வாயிலாகவும் விண்ணப்பித்து ஒவ்வொரு ஆண்டும் விடைத்தாட்களின் நகல்கள் பெற்று வருகின்றனர் எனவும், அவ்வாறு பெறப்படும் மனுதாரர்களின் விடைத்தாட்களை ஆய்வு மேற்கொள்ளும் போது விடைத்தாட்களில் மறுமதிப்பீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பினும் ஸ்கேன் (scan) மற்றும் மறுமதிப்பீட்டிற்கான அரசாணை இல்லாததாலும் / பெறப்படாததாலும் மறுமதிப்பீடு கோரும் தேர்வர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது எனவும், இதனால் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாவதாக தெரிவித்து பத்தாம் வகுப்பு தேர்வுகளின் மதிப்பெண்களே அனைத்து வகையான கல்வி பெறுவதற்கும், வேலை வாய்ப்பிற்கும் முக்கிய அடிப்படையானது என்பதை கருதி, மேல்நிலைத் தேர்வுகளுக்கும், பத்தாம் வகுப்பு தேர்விற்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் மொத்த மதிப்பெண்கள் 100 என்பதால், மேல்நிலைத் தேர்வுகளுக்கு ஸ்கேன் பெறுவதற்கு கட்டணமாக ஒரு விடைத்தாளிற்கு ரூ.275/-ம், மறுகூட்டல் செய்ய ஒரு விடைத்தாளிற்கு ரூ.205/-ம் மற்றும் மறுமதிப்பீடு செய்ய ஒரு விடைத்தாளிற்கு ரூ.505/-ம் என நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தையே பத்தாம் வகுப்பிற்கும் நிர்ணயம் செய்து, மேல்நிலைத் தேர்வுகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் பத்தாம் வகுப்பு பொது மற்றும் துணைத் தேர்வர்களுக்கு விடைத்தாட்களின் ஒளி நகல் (scan copy) வழங்கவும், மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு மேற்கொள்ளவும் உரிய ஆணை வழங்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலித்து அதனை ஏற்று, மேல்நிலைத் தேர்வுகளுக்கான விடைத்தாட்களின் நகல்கள் வழங்குவது போலும், மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு மேற்கொள்வது போலும், இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றி பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு / துணைத் தேர்வு / தனித்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு விடைத்தாள்களின் ஒளி நகல் (Scan copy) வழங்கவும், மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு ஆகிய பணிகளை மேற்கொள்ள அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி அளித்தும், மேலும் மேல்நிலைத் தேர்வுகளுக்கும், பத்தாம் வகுப்பு தேர்விற்கும்

ஒவ்வொரு பாடத்திற்கும் மொத்த மதிப்பெண்கள் 100 என்பதால் மேல்நிலை தேர்வுகளுக்கு ஸ்கேன், மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டல்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணத்தையே பத்தாம் வகுப்பிற்கும் நிர்ணயம் செய்தும் அரசு ஆணையிடுகிறது.

**கட்டண நிர்ணயம்**

| | |
|---|---|
| ஒரு விடைத்தாளின் ஸ்கேன் நகல் பெறுவதற்கு | ரூ.275/- |
| ஒரு விடைத்தாள் மறுமதிப்பீடு செய்ய | ரூ.505/- |
| ஒரு விடைத்தாளை மறுகூட்டல் செய்ய (விடைத்தாள் நகல் பெற்ற பிறகு) | ரூ.205/- |

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண் efile/11047/ கல்விII/2023, நாள் 16.11.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. குமரகுருபரன்
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை - 6 (இணைப்புடன்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35. (இணைப்புடன்)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35. (இணைப்புடன்)

<u>நகல்</u>
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9. (இணைப்புடன்)
நிதித் (கல்வி-II) துறை, சென்னை - 9. (இணைப்புடன்)
இருப்புக் கோப்பு / உதிரி நகல். (இணைப்புடன்)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்
18/11/23

**அரசாணை (நிலை) எண்.211, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை, நாள் 18.11.2023-ன் இணைப்பு**

(1) தேர்வு முடிவுகள் வெளியான பிறகு அரசுத் தேர்வுகள் துறை நிர்ணயம் செய்யும் தேதிக்குள் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளின்படி விடைத்தாட்களின் ஸ்கேன் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(2) பத்தாம் வகுப்பு ஸ்கேன் (scan copy)-க்கு விண்ணப்பிப்பவர்கள் மட்டுமே மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க இயலும். அவ்வாறு விண்ணப்பிக்கும் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக கட்டணத்தொகை குறிப்பிட்டபடி செலுத்த வேண்டும்.

(3) ஸ்கேன் நகல் பார்த்த பிறகு விடைத்தாள் மறுமதிப்பீடு/மறுகூட்டல் செய்யப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட தேர்வர்கள் விரும்பினால் குறிப்பிட்ட வழிமுறைகளுடன் கட்டணம் செலுத்தி அரசுத் தேர்வுகள் துறையினால் நிர்ணயிக்கப்படும் உரிய தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

(4) மறுமதிப்பீடு செய்யும் இடம், காலம் மறுமதிப்பீடு செய்யும் ஆசிரியர்களின் விவரங்கள் தெரியப்படுத்தப்பட மாட்டாது. மறுமதிப்பீடு செய்த பின்னர் அதுகுறித்த பதில் மட்டும் மனுதாரருக்கு அனுப்பப்படும்.

(5) மாணவ/மாணவிகள் விடைத்தாளின் ஸ்கேன் நகலுக்கு மட்டும் விண்ணப்பிக்க விரும்பினால் விண்ணப்பிக்கலாம். தேவைப்படின் மறுகூட்டலுக்கும் மறுமதிப்பீட்டிற்கும் அதற்கென நிர்ணயம் செய்யப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் தனித்தனியாக விண்ணப்பிக்கலாம்.

(6) இத்துறையால் அறிவிக்கப்படும் நாட்களில் மட்டுமே விடைத்தாள் ஒளிநகல், மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தல் வேண்டும். அக்குறிப்பிட்ட நாட்களுக்குப்பின் விடைத்தாள் ஒளிநகல், மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு செய்ய கோரி மனுக்கள் பெறப்படின் அக்கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(7) மறுமதிப்பீட்டின்போது விடைத்தாளில் அதிக குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவ்விடைத்தாளை திருத்திய ஆசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைக்கப்படும்.

(8) தேர்வு நடைபெறும் நேரத்தில் ஒழுங்கீன செயல்புரிந்த மாணவ/ மாணவியர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற தகுதியற்றவர்களாவர்.

(9) மறுமதிப்பீடு செய்து அறிவிக்கும் மதிப்பெண்ணே இறுதியானது. மேலும் மறுமதிப்பீட்டில் மதிப்பெண் குறைந்தால் பழைய மதிப்பெண் மீள வழங்க இயலாது. அதன்பிறகு எதிர்த்து, மனு செய்தல் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

18-11-2023

பிரிவு அலுவலர்

18/11/23

அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006

மேற்குறிப்பு

ந.க.எண்.013522/பி1/2023 நாள்:12.12.2023

அரசாணை (நிலை) எண்.211, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை, நாள்:18.11.2023–ன் நகல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் வழங்கப்படுகிறது.

இணை இயக்குநர் (பணியாளர்)

12/12/23 12/12/2023

பெறுநர்

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
3. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
4. சம்பந்தப்பட்ட பிரிவுகள் (அலுவலகம்)

நகல்:-
1. பள்ளிக் கல்வி இயக்குநர்
2. மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர்
— பணிந்தனுப்பப்படுகிறது.